**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.06** **நாள் : 05.01.2026**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (05.01.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட மேட்டுப்பாளையம் விளையாட்டுத் திடலினை மேம்படுத்துவது குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வில்லிவாக்கம், அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து திரு.வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான கூட்டத்தில், அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், சேத்துப்பட்டு, மீனாம்மாள் சிவராஜ் நகர் (எம்.எஸ்.நகர்) திட்டப்பகுதியில் நடைபெற்று வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடப் பணியின் இறுதிக்கட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், இராயபுரம் மண்டலம், வார்டு-56க்குட்பட்ட பி.ஆர்.என். கார்டன் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருத்துவர்கள் மற்றும்

செவிலியர்களின் வருகைப் பதிவேட்டை பார்வையிட்டு, அங்கு சிகிச்சைக்கு வரும் பொதுமக்களிடம் வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பி.ஜெயின், திரு.பி.ஸ்ரீராமுலு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.இளம்பருதி, செயற்பொறியாளர் திரு.ஜானி சாம்ராஜ், மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**